முன்னிட்டு சர்க்காருக்கு வீண் செலவு ஏற்படுத்தக் கூடிய முறையில் கட்டப்படக் கூடிய இந்த பஸ் நிலையத்தைக் கட்டாமல் இருப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஏற்கனவே இருந்த பஸ் நிலையம் ஊருக்கு மத்தியப் பகுதியில் இல்லாத காரணத்தால் மத்தியப் பகுதியொன்றைத் தேர்ந்தெடுத்து அங்கே பஸ் நிலையம் கட்டப்படவேண்டுமென்ற நகராட்சிமன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது அதற்கான உரிமம் வழங்கப்பட்டு அதற்காக 25 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்பட்டு இருக்கிறது.

சின்னாற்றின் குறுக்கே பாலம்

*467 வினா.—திரு. க .முருகேசன்: மதிப்பிற்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தர்மபுரி வட்டம், பாலக்கோடு-கசர்குளி ரோட்டில் சின்னாறு குறுக்கே பாலம் கட்டும் திட்டம் தற்போது என்ன நிலையில் உள்ளது, எப்போது நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் நிச்சயித்துள்ள முக்கியத்துவப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு தான் "இதர சாலைகளின்" கீழ் புது வேலைகள் துவங்க அரசு அனுமதி அளிக்கிறது. பாலக்கோடு—கசர்குளி சாலையில் 5-வது மைல் 7-வது பர்லாங்கில் சின்னாற்றின் குறுக்கே பாலம் கட்டும் வேலையானது, மாவட்ட அபிவிருத்தி மன்றத்திரைல் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 வேலைகளில், 3-வது வேலையாக சேர்க்கப்பட்டுள்ளது. "இதர சாலைகளில்" ஏற்கெனவே 212 வேலைகள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. கேள்வியில் சொல்லும் வேலையை விட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளை அனுமதித்த பிறகுதான் இந்த வேலையை எடுத்துக் கொள்ள இயலும்.

பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள்

*468 வினா—திரு. ஈ. எம். நடராசன்: மதிப்பிற்குரிய உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை tribal-block — குகள் இருக்கின்றன?

(இ) கோவை மாவட்டத்தில் பர்கூர் மலைப் பிரதேசத்தை ஒரு tribal-block — காகச் செய்யும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இம்மாநிலத்தில் பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள் இரண்டு உள்ளன. ஒன்று சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லிமலை வட்டாரத்திலும், மற்றொன்று ஏர்க்காடு வட்டாரத்திலும் உள்ளது.

(இ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. ஈ. எம். நடராசன் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் பர்கூர் மலைப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் பின்னடைந்த நிலையில் இருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியை தனி வளர்ச்சி வட்டாரமாகக் கருதி அந்தப் பகுதி மக்கள் முன்னேற தமிழக அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பர்கூர் பகுதியை அந்த முறையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கத்தின் விதிமுறைகளின்கீழ் அது வராத காரணத்தால் அதை நல்ல முறையில் வட்டார வளர்ச்சிப் பகுதியாக மாற்றக் கூடிய நிலை இல்லை. இந்த ஆண்டு நிதி நிலை தட்டுப்பாடாக இருக்கிற காரணத்தால் புதிய அமைப்பை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

'கிராம நலம்'

* 469 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மதிப்பிற்குரிய உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசால் நடத்தப்பெறும் 'கிராம நலம்' என்ற மாதப் பத்திரிகைக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் செலவென்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சந்தா தொகை ரூ. 27,681-ம் இந்திய அரசினரால் அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 13,000-ம் வரவு வைத்த பின்னர் 1966–67 ஆண்டில் செலவிடப்பட்ட நிகரத் தொகை ரூ. 1,15,064.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, இந்தப் பத்திரிகையை அரசே நடத்தவேண்டிய முக்கிய காரணமென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கிராம வளர்ச்சியைப் பற்றியும், வட்டார வளர்ச்சியைப் பற்றியும் முன்னேற்றங்களைப் பற்றியும், அதுபற்றி அரசாங்கம் அவ்வப்பொழுது விடுக்கின்ற அறிவிப்புகளைப்பற்றியும் அந்தந்தப் பகுதி மக்களுக்கு அறிவிப்பதற்காக இந்த விளம்பரப் பகுதி நீண்டகாலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவண்ணாமலை பஸ் நிலையத்தைப்பற்றிய 466-வது வினாவின்போது, ஒரு துணை வினாவைக் கேட்க நகராட்சித் தலைவர் திரு. தா. விஜயராஜ் அவர்கள் கையை உயர்த்தியதை நான் கவனிக்கவில்லை. ஆதலால் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இசைந்தால், அவ்வுறுப்பினர் அதுபற்றி ஒரு துணை வினா கேட்க நான் இப்பொழுது அனுமதிக்கிறேன்.

திரு. தா. விஜயராஜ் : ஏற்கனவே உள்ள பஸ் நிலையம் சரியாக இல்லை என்ற காரணத்தால் புதிய பஸ் நிலையம் ஒன்று கட்ட